## தமிழ்நாடு முழுவதும் எதிரொலிக்கும் குரல்

# ஆர்.என்.ரவி ஆளுநர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதே!

**அரசியல் சட்டப்படியும், தார்மீக இயற்கை நீதியின் அடிப்படையிலும் தமிழ்நாடு ஆளுநர் உடனடியாக பதவி விலக வேண்டும். அல்லது ஒன்றிய அரசு ஆளுநர் ஆர்.என்.ரவியை அப்பொறுப்பிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.**

இந்திய அரசியல் சட்டப்படி மாநில ஆளுநர்கள் குடியரசுத்தலைவரால் பணியமர்த்தப்படுகிறார்கள்(appointed). மேலும், தொடர்புடைய மாநிலங்களில் பொறுப்பேற்கும் ஆளுநர்கள் அரசியல் சட்டப் பிரிவு 159ன் கீழ் உறுதி மொழி எடுத்துக் கொள்கிறார்கள். அந்த உறுதிமொழியின் படி தொடர்புடைய மாநில மக்களின் நல்வாழ்விற்கான பணிகளை மேற்கொள்வேன் என்றும், அரசியல் சட்டத்தை எல்லா வகையிலும் பாதுகாக்க வேண்டிய கடமையை முறையாக நிறைவேற்றுவேன் எனவும் உறுதி மொழி எடுக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டினுடைய ஆளுநர் ஆர்.என். ரவி, தான் எடுத்துக் கொண்ட உறுதிமொழியையும், தனக்கென அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரவரம்பின் எல்லைகளையும் மீறி, தான் பொறுப்பேற்றுக் கொண்ட நாள் தொடங்கி, ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பாரதிய ஜனதாக் கட்சிக்கும், அந்தக் கட்சிக்கு சித்தாந்த ஆலோசனைகளை வழங்கும் இராஷ்டிரிய சுயம் சேவக் சாங் அமைப்பிற்கும் தமிழ்நாட்டின் முகவராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறாரே அல்லாமல், தன்னுடைய அரசியல் சட்டக் கடமைகளை கிஞ்சிற்றும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்கின்ற உண்மைகளை தமிழ்நாட்டு மக்கள் மிகத் தெளிவாகவே அறிவார்கள்.

தமிழ்நாட்டின் பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் முதல்வராக மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும், வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் "திராவிட மாடல் ஆட்சி" இன்று இந்திய ஒன்றியம் முழுமையும் பிரதிபலிப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. பிற மாநில அரசுகளும் "திராவிட மாடல் ஆட்சியின்" புரட்சிகர சட்டங்களையும், புதுமையான திட்டங்களையும் பின்பற்றி தங்கள், தங்கள் மாநிலத்தில் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான வழித்தடம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதைக் கண்டு எரிச்சல் அடைந்த பாரதிய ஜனதாக் கட்சியின் ஒன்றிய ஆட்சியினர் ஆளுநர் ரவியின் மூலமாக தமிழக அரசினுடைய சட்டங்களுக்கும், திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்குவதில் காலதாமதப்படுத்துவதும், நிரந்தரமாகத் தடுப்பதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மாண்புமிகு தமிழக முதல்வர் ஒன்றிய அரசிடமும், குடியரசுத் தலைவரிடமும் ஆளுநர் ரவியின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து எடுத்துக் கூறியும், எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. உச்சநீதிமன்றமும், ஆளுநர் ரவியின் அரசியல் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும் என்பதோடு தமிழ்நாட்டின் முதலமைச்சரிடம் இணக்கமான அணுகுமுறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டியும், ஆளுநருடைய நடவடிக்கையில் எவ்விதமான மாற்றமும் இல்லாமல், ஆளுநர் ரவியின் எதேச்சதிகாரப் போக்கு தொடர்ந்த நிலையில், தமிழக அரசின் சார்பாக ஆளுநர் ஆர்.என். ரவியின் தொடர் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் 08/04/2025ம் தேதி இரண்டு நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு அனைத்து மாநிலங்களுக்கும் புதிய வெளிச்சமும், விளக்கமும் தரக்கூடிய ஓர் வரலாற்றுத் திருப்புமுனைத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பு குறித்து இந்து ஆங்கில நாளிதழ் விரிவான தலையங்கம் தீட்டியுள்ளது.(The Hindu, Date: 10.04.2025)

குறிப்பாக, எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் குடியரசுத் தலைவரால் பணி நியமனம் செய்யப்பட்ட ஆளுநர்கள், அந்தந்த மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதும், இந்தப் பிரச்சினைகள் இந்திய அரசியல் அரங்கத்தில் உச்சகட்டத்தை அடைந்திருக்கும் சூழலில், இத்தகைய பிரச்சினைகளுக் கெல்லாம் முடிவு கட்டி, தீர்வு காணக்கூடிய வரலாற்றுத்திருப்புமுனைத் தீர்ப்பாக உச்சநீதிமன்ற அமர்வு வழங்கியிருப்பதன் மூலம், எந்த ஒரு மாநிலத்தின் ஆளுநரும் அரசியல் சட்டத்தினுடைய வரையறைகளுக்கு உட்பட்டவர்களேயல்லாமல், அரசியல் சட்ட வரைமுறைகளை மிஞ்சிய அதிகாரம் ஆளுநர்களுக்கு இல்லை என்பதை உறுதிபட உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி காலதாமதப்படுத்தி நிறுத்தி வைத்திருந்த பத்து மசோதாக்களுக்கு, ஆளுநர் ரவி கொடுத்த விளக்கம் என்பது, "காலதாமதப்படுத்தி நிறுத்தி வைத்தாலே அந்த மசோதாக்கள் காலாவதியாகி விட்டது" என்றுதான் அர்த்தம் என ஆணவத்தோடு விளக்கமளித்தார். ஆனால், அப்படிப்பட்ட அதிகாரம் எதுவும் ஆளுநருக்கு வழங்கப்படவில்லை என்பதை உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஆளுநரால் காலதாமதப்படுத்தி நிறுத்தி வைக்கப்பட்ட 10 மசோதாக்களும் அரசால் நடத்தப்படுகின்ற பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களின் நியமனங்கள் குறித்ததாகும். இது குறித்த ஆளுநரின் நடவடிக்கை முற்றிலும் அரசியல் சட்டத்திற்கு முரணானது மட்டுமல்ல, அரசியல் சட்டப்படி முற்றிலும் தவறானதும் கூட என்று உச்சநீதிமன்றத்தினுடைய அமர்வு எச்சரித்திருக்கிறது.

மேலும், இந்திய அரசியல் சட்டம் உச்சநீதிமன்றத்திற்கு வழங்கியிருக்கின்ற சிறப்பு அதிகாரத்தைப்(Article 142) பயன்படுத்தி ஆளுநரால் நிராகரிக்கப்பட்ட 10 மசோதாக்களுக்கும் ஏற்கனவே தமிழக சட்டமன்றத்தால் இரண்டாவது முறையும் நிறைவேற்றப்பட்டு விட்டமையால், அந்த 10 மசோதாக்களும் ஆளுநரின் ஒப்புதல் பெற்றதாகவே கருதப்பட்டு, சட்டங்களாக அமல்படுத்தப்படும் என்ற உச்சநீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பு ஆளுநருடைய அதிகாரத்தையும், நடைமுறைகளையும் வரையறுத்திருக்கிறது.

இந்தத் தீர்ப்பு, தமிழ்நாடு அரசு, ஆளுநர் மூலமாக எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கான தீர்வு மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களுக்கும் இந்தப் பிரச்சினைகளில் ஆளுநர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான வழிகாட்டும் நிபந்தனைகளாக உள்ளது என்பதில் ஐயப்பாட்டிற்கு இடமில்லை. (The verdict enhances the administrative autonomy of States, and regulates the functioning of constitutional offices, with implications for the entire country).

உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்பது சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட ஆளுநரை கண்டித்ததோடு மட்டுமல்லாமல் இனி, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கின்ற மசோதாக்களை தன்னுடைய விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில் பொறுப்பற்ற காரணங்களைச் சொல்லி நிராகரிக்கக் கூடாது என்றும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பதிலளிக்க வேண்டும் என்றும் வரையறுத்துள்ள உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்பது இந்தியா முழுமையும் உள்ள மாநிலங்களுக்கு மிகப்பெரிய வழிகாட்டுதலாக அமைந்துள்ளது ( The significance of the judgment goes beyond the censure of a particular Governor. It lays down definite timelines for Governors to act on Bills. It ensures that Governors can no longer indefinitely delay legislation under the pretext of scrutiny or act whimsically or with impunity. The Court has reaffirmed a constitutional principle that has often been undermined: that Raj Bhavans must function with transparency, and accountability).




**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்


உச்சநீதிமன்றத்தினுடைய இந்தக் கடுமையான கண்டனத்திற்கு பின்னரும், ஆளுநர் தன் பொறுப்பில் தொடர்வது அரசியல் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மிக உயர்ந்த பொறுப்புக்கு களங்கத்தை ஏற்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

இந்து தலையங்கம், உச்ச நீதிமன்றத்தினுடைய இந்தத் தீர்ப்பு என்பது நீதித்துறையில் ஓர் மைல்கல் என்பதோடு மட்டுமல்லாமல், இந்த தீர்ப்பின் மூலம் அரசியல் சட்டத்தை ஆளுநர்கள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்ற ஒழுக்கத்தையும், ஒன்றிய அரசிற்கும், மாநிலங்களுக்கும் இடையேயான கூட்டுறவுக் கூட்டாட்சி முறைக்கு கிஞ்சிற்றும் தீங்கு விளைவிக்கின்ற நடவடிக்கையில் ஆளுநர்கள் ஈடுபடக் கூடாது என்று எச்சரிக்கிறது.

ஆனால், தமிழ்நாட்டின் ஆளுநர் அரசியல் சட்டத்தினுடைய வரன்முறைகளையும், அரசியல் சட்டத்தால் உருவாக்கப்பட்ட உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய கோட்பாடுகளை முற்றிலும் வேண்டுமென்றே திட்டமிட்டு அரசியல் காரணங்களுக்காக நிராகரித்துவிட்ட ஆளுநர் ஆர்.என். ரவி, இனி ஒரு நொடிப் பொழுது கூட அந்தப் பொறுப்பில் தொடர்வது எந்த வகையிலும் நியாயமானதல்ல. அப்படியே, மலுமட்டைத்தனமாக ஆளுநர் ரவி அந்தப் பொறுப்பில் தொடர்வாரேயானால், ஒன்றிய அரசும், குடியரசுத் தலைவரும் தமிழ்நாட்டின் நலன் கருதி ஆளுநர் ரவியை அப்பொறுப்பிலிருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்பதுதான் அனைத்து மக்களின் குரலாக தமிழகம் முழுமையும் எதிரொலிக்கிறது.



திருப்போரூர் ஒன்றியம், கேளம்பாக்கம் ஊராட்சியில், மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆலோசனைப்படி, கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன் ஏற்பாட்டில் திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்பு செழியன் ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் ஏ.ரமேஷ், செ.எல்லப்பன், கி.பாஸ்கரன், மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## விருதுநகர் மாவட்டம்

# வத்திராயிருப்பு பேரூராட்சியில் சீரான குடிநீர் விநியோகம்!

### சட்டப்பேரவையில் - அமைச்சர் கே.என்.நேரு விளக்கம் !

**சென்னை, ஏப்.12-**

**சட்டப்பேரவையில், கேள்வி நேரத்தின்போது விருதுநகர் மாவட்டம் - வத்திராயிருப்பு பேரூராட்சியில் சீரான குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது என, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு விளக்கமளித்தார்.**



கேள்விநேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இ.மா.மான்ராஜ்:** ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு பிளவக்கல் அணையிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** விருது நகர் மாவட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சியின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 20,321 ஆகும். இப்பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன.

தற்போதைய மக்கள் தொகை அடிப்படையில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் அளவிலே குடிநீர் வழங்கத் தேவைப்படும் குடிநீரின் அளவு 14.22 இலட்சம் லிட்டராகும். இப்பேரூராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தினசரி வழங்கிட நிர்ண யிக்கப்பட்ட குடிநீரின் அளவு 4.90 இலட்சம் லிட்டராகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தினசரி 4 இலட்சம் லிட்டர் அளவில் குடிநீர் வழங்கி வருகிறது.

மேலும், மக்கள் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பேரூராட்சியின் உள்ளூர் ஆதாரங்கள், திறந்த வெளிக் கிணறுகள் மற்றும் 98 சிறுமின்விசைப் பம்ப்புகள்மூலம் 11.80 இலட்சம் லிட்டர் மற்றும் கூட்டுக்குடிநீர்த்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் 4 இலட்சம் லிட்டர் அளவுள்ள குடிநீரைச் சேர்த்து தினசரி 15.80 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் Sintex tankமூலம் தனி நபருக்கு 77 லிட்டர் என்ற அளவிலே வழங்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் ஏற்கெனவே தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

மேலும், பேரூராட்சியில் உள்ளூர் ஆதாரங்கள் மூலமாகப் போதுமான அளவில் பொது மக்களுக்குத் தினசரி குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இ.மா.மான்ராஜ்:** Borwell நீரில் சுண்ணாம்புச் சத்து அதிகமாக உள்ளதால் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் முழுவதுமாக தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**கே.என்.நேரு:** ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் அவர்களும் இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, அதிகாரிகளிடம் இதுகுறித்து விரிவான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஏற்கெனவே, அங்கே கிணற்றிலிந்து எடுக்கப்படுகிற குடிநீர் மாசுபட்டிருக்குமானால், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றுதான் அதற்குத் தீர்வாக இருக்கும்.

ஏற்கெனவே மேற்குத் தொடர்ச்சி மலையின் அருகிலேயே பெரிய கிணறுகள் அமைத்து, அவற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு திட்டம் தீட்டப்பட்டது.

ஆனால், அது 9 மாதங்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்கும், எஞ்சிய 3 மாதங்களுக்கு தண்ணீர் இருக்காது என்ற காரணத்தால், தாமிரபரணியை நீராதாரமாகக் கொண்டுதான் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனவே, உறுப்பினர் அவர்கள் சொல்வது குறித்து, முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, நிதி ஆதாரத்திற்கேற்ப இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள முடியுமா என்று ஆராய்ந்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இ.மா. மான்ராஜ்:** திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியான கிருஷ்ணா நகர், அசோக் நகர், SMT நகர் ஆகிய பகுதிகளில் வாறுகால், குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதிகள் அமைத்துத் தர வேண்டும்.

மேலும், திருவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதியில் வாறுகால் சரிவர சுத்தம் செய்யப்படாமலும், குப்பைகள் அகற்றப்படாமலும் உள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் சுகாதார சீர்கேட்டுக்கு ஆளாகின்றனர்.

எனவே, நகராட்சிப் பகுதிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் கால்வாய்களைச் சுத்தம் செய்து, குப்பைகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**அமைச்சர் கே.என். நேரு:** நிச்சயமாக குப்பைகளை அகற்றி, கழிவுநீர் தேங்காமல் இருப்பதற்கான அனைத்துப் பணிகளும் செய்யப்படும். அதற்குரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, அதிகாரிகள்மூலம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## கோவை மாவட்டத்திற்கும் — மேற்கு மண்டலத்திற்கும்

# முதல்வர் வழங்கிய திட்டங்கள் ஏராளம்!

### சட்டப்பேரவையில் - பா.ஜ.க. உறுப்பினருக்கு - அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பதிலடி!

சென்னை, ஏப்.12-

சட்டப்பேரவையில் விவாதத்தின் போது பேசிய உறுப்பினர் வானதி சீனிவாசன், கோவை தெற்கு தொகுதியில் நடைபெறும் பணிகள குறித்து குறை கூறிப்பேசினார். அவருக்குப் பதிலடி கொடுத்த மின்துறை அமைச்சரும் - கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான வி. செந்தில்பாலாஜி, "மேற்கு மண்டலத்திற்கும் கோவை மாவட்டத்திற்கும் முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய திட்டங்கள் ஏராளம்" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி குறிப்பிட்டதாவது:-



(நாம் செலுத்துகின்ற வரியைவிட, தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பகுதிகளுக்கு அதிக மான திட்டங்களையும், நிதியையும் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, அங்கு இருப்பது 10.75 இலட்சம் குடும்ப அட்டைகள்தான். அவற்றில் ஏறத்தாழ 4 இலட்சத்து 61 ஆயிரம் குடும்பத் தலைவிகள் முதலமைச்சர் அவர்கள் வழங்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் மாதம் ரூ.1,000/ஐ உரிமைத் தொகையாகப் பெற்று வருகின்றார்கள்.

இவ்வாறு வழங்கப்படும் திட்டங் களை தொடர்ச்சியாக நாள் முழுவதும் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

அதிலும், கோவை மாவட்டத்திற்கு மட்டுமான திட்டங்களை மட்டுமே அவ்வாறு சொல்லலாம். எனவே, நாம் செலுத்தக்கூடிய வரியைவிட மிக அதிகமான அளவில் கோவை மாவட்டத்திற்கும், மேற்கு மண்டலத்திற்கும் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி குறிப்பிட்டார்.

# கன்னியாகுமரி மேற்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் மனோ தங்கராஜ் எம்.எல்.ஏ. தலைமை! வீர வர்க்கீஸ் அறிவிப்பு!

கன்னியாகுமரி, ஏப்.12-

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நாளை (13.4.2025-ஞாயிறு) மாலை 4 மணிக்கு குமரி மேற்கு மாவட்டம் அழகிய மண்டபம் மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இதில் பொறியாளர் அணிக்கு கன்னியாகுமரி மேற்குமாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள் மூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்த தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என மாவட்டக் கழகச் செயலாளர் த. மனோ தங்கராஜ் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி கொசப்பூர் பகுதியில் குடிநீர் குழாய்கள் பழுதடைந்து உள்ளதாக பொதுமக்கள் தெரிவித்ததை தொடர்ந்து, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், சென்னை குடிநீர் வடிகால் வாரிய உதவி பொறியாளர் அவர்களுடன், சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று பார்வையிட்டு உடனடியாக பணி முடித்து கொடுத்தார். 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி. மூர்த்தி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் வெங்கடேசன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் வி. சிவப்பிரகாஷ் மற்றும் குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்கள் உடன் உள்ளனர்